Registered as a Newspaper in Ceylon ★ ✱ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 250
தொலைபேசி எண்: 49
போன்:389
National Tamil Daily
தேசிய தினசரி

சாதாரண ஸ்ரீ வருடம் ஐப்பசி 2 நஜப் 25 வெள்ளிக்கிழமை [18-10-68



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

# 'தீண்டாமையை ஒழிப்பதற்கு காந்தி பாதையில் செல்வோம்'

## சுகாதார ஊழியர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, வியா

சுகாதார பகுதி ஊழியர் இம்மாதம் 20-ம் திகதி பொதுவேலைநிறுத்தமொன்றில் இறங்குவதெனச் செய்யப்பட்ட முடிவைக் கைவிட்டுவிட்டதாக அறிவித்துள்ளனர்.

சுகாதாரஊழியர்யூனியன் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்ததைத் தொடர்ந்தே இந்த உத்தேச வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

நாலு சுகாதார ஊழியர் யூனியன் பிரதிநிதிகளும், சுகாதார அமைச்சரும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவர். சுகாதார ஊழியரின் சில கோரிக்கைகளை அளிப்பதற்கு சுகாதார அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்- 4 மணித்தியாலங்கள் மேலதிகமாக வேலை செய்வதற்கு மாதமொன்றுக்கு 20 ரூபாய் கூடுதலாக வழங்குவதற்கு சுகாதார அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

அரசாங்க இடமாற்றம் சம்பந்தமாகவும் 40 ரூபாய் சம்பள உயர்வு சம்பந்தமாகவும் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதென்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் குன்றக்குடி அடிகளார்

— நமது காரியாலய நிருபர் —

யாழ்ப்பாணம், வெள்ளி

"இன்றைய உலகில் பகைமை வளர்ந்துகொண்டிருக்கிறது; இதனைத் தடுத்து நிறுத்தாவிட்டால் உலகம் அழிவுப் பாதையையே நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்; பேசாத விலங்கினத்தோடு கூட உறவாடப்பழகிக்கொண்டுள்ள மனிதன் தனது இனத்துடன் உறவாக நடந்து கொள்ளவிரும்புகின்றானில்லை. மாறாக வெறுப்பை வளர்க்கிறான், மகாத்மாகாந்தி வேகம் கொடுத்த தீண்டாமை ஒழிப்புஇயக்கம் பரவலாகி நமது சமுதாயத்திலிருந்து இந்த நிலை முற்றாக அகற்றப்படவேண்டும். இல்லாவிடில் நாம் காந்திஜியின் உண்மையான தத்துவத்தைக் கடைப்பிடித்தவர்களாக மாட்டோம்."

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற காந்தி நூற்றாண்டுவிழாவுக்கு முதல்வர் செ. சின்னத்தம்பி தலைமைவகித்தார். திரு. குன்றக்குடி அடிகள் முதலிய செனட்சபைத்தலைவர் திரு. இரத்நாயகா திரு. சோமசுந்தரம், திரு. ஹண்டி பேரின்பநாயகம் ஆகியோருக்கு பட்டாடை போர்த்திக் கௌரவித்தார்.

அடிகளார் இருமேலும் பேசுகையில், சாதியின் பெயரால் தீண்டாமை காட்டுவது அநீதியென்றும், காந்திய வழியில் மனச்சாட்சியுடன் தீண்டாமையை ஒழிக்க ஒவ்வொருவரும் முன்வந்து காந்திய வருடமான இந்த ஆண்டில் இதற்கு முடிவு காண வேண்டுமென தாம் மன்றுமிடமாகக் கேட்டுக் கொள்வதாகவும் தமிழ் மக்கள் தீண்டாமையை அகற்ற வேண்டுமென இங்களுக்கு தங்களை வேண்டுவது தமிழினத்துக்கே ஒரு இழுக்கு என்றும் குறிப்பிட்டார்.

திரு ரத்நாயகா பேசுகையில் தனிமனிதனின் உரிமையைப் பாதுகாக்க அரசியல் சாஸனத்தில் சட்டம் அமைப்பது அவசியமென்றும் இத

(8-ம் பக்கம் பார்க்க)

## 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு

பம்பலப்பிட்டி, வியா

நாட்டில் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கும் 316 கைத் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டால் 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்திட்டத்திற்கு அரசாங்கம் 300 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்தகவலைக் கைத்தொழில் அமைச்சைச் சேர்ந்த உயர்தர அதிகாரி திரு மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

கடந்தவருடம் 116 கைத்தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றும் மிகுதியான 200 நிலையங்களும் நிறுவப்படுவதால் நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான வேலையற்றவர்களுக்கு தொழில் வசதியளிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டதும் வெளிநாடுகளிலிருந்து விசேஷ உபகரணங்கள், இயந்திர சாதனங்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும் 1000 பயிற்சியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

## "காந்தியின் தத்துவங்கள் எந்த பிரச்னையையும் தீர்க்கும்"

### செனட் சபைத்தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

"மகாத்மா காந்தியின் உண்மையும், அஹிம்சைத் தத்துவங்களும் உலகில் எந்தப்பிரச்னைக்கும் தீர்வு தரக்கூடியன"

நேற்று காலைவிசேஷ விமானத்தில் யாழ்ப்பாணம் வந்த செனட் சபைத் தலைவரான திரு ஏ. ரத்நாயக்கா 'ஈழநாடு' பத்திரிகை மூலம் விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் காந்தி ஜெயந்தி நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று காலை 10-25 மணிக்கு விசேஷ விமானத்தில் திரு. இரத்நாயக்கா பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார். இவருடன் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் திருவாளர்கள் பாலித வீரசிங்க, எஸ். சோமசுந்தரம், கே. வி. தங்கராஜா ஆகியோரும் வந்திருந்தார்கள்.

அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா செனட்டர் எஸ். நடராஜா, காந்திய சேவா சங்கத் தலைவர் முதலியார் எஸ். சின்னத்தம்பி, முதலியார் முத்துத்தம்பி திரு. ஹண்டிபேரின்பநாயகம், கல்லூரி அதிபர்கள் உட்பட பலர் விமான நிலையத்துக்கு இவர்களை வரவேற்கவந்திருந்தார்கள்.

காந்தி நூற்றாண்டு விழாச் சபைத் தலைவரும், செனட் சபைத் தலைவருமான திரு. ஏ. இரத்நாயக்கா இங்கு மேலும் தெரிவித்ததாவது:

**யாழ். மக்களின் கூட்டுறவு**

யாழ்ப்பாணம் ஒரு வளம்மான பூமியாகும். இங்கு வந்திருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். முன்னர் உள்நாட்டு அமைச்சராக இருந்தபோதும் நான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளேன். எனக்கு இதனால் யாழ்ப்பாணத்தில் அதிக நண்பர்களுண்டு. அந்த வேளையில் யாழ்ப்பாணத்து மக்களது கூட்டுறவு மனப்பான்மையை என்னால் நன்கு காணக்கூடியதாக

[8-ம் பக்கம் பார்க்க]

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 216வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:—

முதலாவது பரிசு
43 W 0838 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
20 Q 0857 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
29 Q 0124 ரூ. 10,000

(8-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா

## வட வியட்னாம்மீது குண்டுவீச்சை பூரணமாக நிறுத்தும்?

வாஷிங்டன், அக் 17

வடவியட்னாம்மீது அமெரிக்கா பூரணமாக குண்டுவீச்சை நிறுத்தவிருப்பதாக வெள்ளை மாளிகையிலிருந்து கிடைத்த உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதத்தில் குண்டுவீச்சை ஓரளவு குறைத்துக்கொண்ட அமெரிக்கா பூரணமாக நிறுத்திக் கொள்வது தற்காலமுடிவுகளை மேற்கொள்வதில் தீவிரமாக இறங்கியுள்ளதாக வெள்ளை மாளிகை உயர் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் இன்று குண்டுவீச்சை பூரணமாக நிறுத்துவது சம்பந்தமாக உயர் அதிகாரிகளுடன் உயர்நிலைப்பேச்சுவார்த்தை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகரசபை
## கேள்வி அறிவித்தல்

கீழே தரப்பட்ட வீதிவாசனைக்கான பலகைகள் விநியோகம் செய்வது சம்பந்தமான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28-10-68-ம் திகதி நண்பகல் 12 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மகோகனி அல்லது இலங்கைத் தேக்கு

6 — 11 1/2" X 2" X 1 1/8" " " "
2 — 11 1/2" X 18" X 1 1/8" " " "
95 — சதுர அடி 12" X 1/2" " " "
8 — 6" X 20" X 1 1/8" " " "
60 — நீட்டு அடி 6" X 1 1/8" " " "
10 சதுர அடி 12" X 2" " " "
10 சதுர அடி 12" X 1 1/2" " " "
1000 சதுர அடி 1" இனிசப்புப் பலகை
800 சதுர அடி 1/2" " "
10 — 4" X 3" பாலைக் கடி
170 சதுர அடி 1" சப்பும் பலகை
800 சதுர அடி சிவின் பலகை.


கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. உங்கள் கடிதத்திலேயே கேள்விகள் அனுப்பப்படவேண்டும். கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டுப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் அல்லது காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் மேற்குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்னர் போடப்படவேண்டும்.

க. பேரம்பலம்
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14-10-68. 1019


அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
மீண்டும் தோன்றுகிறான்
ராஜா வெண்திரையில்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 9-45 3 காட்சிகள்
போயா, போயா முதல்நாள், ஞாயிற்றுக்கிழமை
காலை 10-30 மெற்னி
காவல்காரன்
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நம்பியார், அசோகன்
மற்றும் பலர் நிறம்பட நடித்தது

லிங்கலி வினாலா மைலன்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (சுன்னாகம்)
★ எம். ஜி. ஆர். - ★ சரோஜாதேவி
அசோகன், நம்பியார், சந்திரபாபு, தங்கவேலு
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்



பறக்கும் பாவை
(சங்கிலன் கலர்)

82-வது தினம்
லிடோ (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக்கலர்)


## யாழ்ப்பாண மாதர் முன்மாதிரியாகவிளங்குகிறார்கள்
### அரசாங்க அதிபர் பாராட்டு

பருத்தித்துறை, விசா.

"உள்நாட்டுக் கைத்தொழில் துறையில் யாழ்ப்பாணப் பகுதி மாதரைப் போல நாட்டின் வேறு பகுதிகளில் எவருமே முன்னேறவில்லையென துணிந்து கூறலாம். பொருளாதார நெருக்கடி நிலவும் இன்றைய காலகட்டத்தில் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் வடபகுதிப் பெண்களின் ஒயாத உழைப்பு பாராட்டுதற்குரியதொன்றாகும்".

இவ்வாறு வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, தேற்றமுன்றிலம், பருத்தித்துறை, புலோலி மேற்கில் உள்ள மாதர் கைப்பணி நெசவாலையைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

வடமராட்சிக் காரியாதிகாரிதிரு எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு. அபயசேகரா தொடர்ந்து கூறியதாவது:

"நேரத்தின் அருமையையும், பணத்தின் அருமையையும் நன்குணர்ந்து, சிக்கனமாக வாழும் பண்பு வாய்ந்த யாழ்ப்பாண மாதர் இலங்கையில் வாழும் சகல இனத்தவருக்கும் முன்மாதிரியாக விளங்குவது கண்டு பெருமைப்படுகிறேன் நாட்டுக்கு உழைப்பதே நாட்டுப்பற்றுக்கு உழைப்பதே உரைக்கல்லாகும் என்பது எனது எண்ணம்."

திரு. எஸ். ஜெயகாந்தன் நன்றி கூறினார்.

### ஆசிரியர் குறை

சுழிபுரம், விசா.

சகல அரசாங்க இலாகாக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு தீபாவளித் திருநாளையொட்டி முற்பணம் கொடுக்கப்படுகின்றபோது ஆசிரியர்களுக்கு மட்டும் இச் சலுகை அளிக்கப்படாதது குறித்து ஆசிரியர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமது கல்லூரி அதிபருக்கூடாக ஓர் விண்ணப்பத்தைக் கல்விக் கந்தோருக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் தீபாவளிக் கொண்டாட்டத்துக்கு முற்பணம் கொடுக்க மாட்டாது என பதிலில் தெரிவிக்கப்பட்டது.

### புதிய நிர்வாகிகள்

கொழும்பு, விசா.

வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற சாரா ஆயிஷா சங்கத்தின் 25-வது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் திருவாளர்கள் வி. தில்லைநாதன், எஸ். சந்தைப்பா, கே. எஸ். நடராசா, தலைவர் திரு வி. சிவகுரு. உபதலைவர்கள் திருவாளர்கள் எஸ். கே. பி. விஜயசிங்கம் எஸ். எஸ். இராஜரத்தினம், செயலாளர் திரு க. க. சுப்பிரமணியம், துணைச் செயலாளர் திரு ஐ. தி. சம்பந்தன், பொருளாளர் திரு எஸ் குலசேகரம்.

ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.


மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
போயா, பின்போயா 2-30
T. R. ராமச்சந்திரன்
வைஜயந்திமாலா
நடித்த
வாழ்க்கை
(புதிய கொப்பி)

From 17th to 19th
17th & 18th at 4-15 p. m
19th at 10-30 a. m. only
Louis Prima
June Wilkinson
in
Twist All Night

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 2.30, 6-30 மணி
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
பெண் என்றால் பெண்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 10-00 மணி
உதயகுமார்
சரோஜாதேவி
நடித்த
யானைப்பாகன்

மனோகரா யாழ்ப்பாணம்
மாலை 6-30 இரவு 10-00 மணி
ஜெய்சங்கர்
காஞ்சனா
நடித்த
சபாஷ் தம்பி


## வரி விளம்பரம்

### தேவை

எங்களுடைய பத்திரிகை புத்தகங்கள் விநியோகம் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஒரு பையன் தேவை. உடனடியாக நேரில் வந்து சந்திக்கவும். கடையில் தங்கக்கூடியவர் விரும்பத்தக்கது. ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், 254, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 278

### அடிகளார் சிறப்பு பேருரை

சுழிபுரம், வெள்ளி

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் மாதகல் புனித லூர்து மகா வித்தியாலய மண்டபத்தில் குன்றக்குடி ஆதீன மடாதிபதி தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'நால்வர் அடிச் சுவட்டிலே' என்னும் விஷயம் பற்றிச் சிறப்புப் பேருரை நிகழ்த்துவார்.


ஈழநாடு
தினக்குறிப்பு
1969

| FEBRUARY 1969—தை 1969 | |
|---|---|
| 2 Sunday<br>20 ஞாயிறு<br>போயாவின் பின் 1-ம் நாள்<br>தைப்பூசம்<br>பூரணை விரதம்<br>காணிக்கைத் திருநாள் | |
| 3 Monday<br>21 திங்கள்<br>போயாவின் பின் 2-ம் நாள் | |

அழகிய கடதாசியில்
வழமைபோல்
சகல விபரங்களுடனும்
தயாராகிக்கொண்டிருக்கிறது.

விற்பனையாளர்கள் பொதுமுகாமையாளருடன்
தொடர்பு கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செக். நாட்டில் ரஷ்ய துருப்புகள் நிலைகொள்ளல் பற்றிய உடன்படிக்கை

## ரஷ்ய - செக். பிரதமர்கள் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவிப்பு

பிராக், ஒக், 17

செக்கோஸ்லாவாக்கியாவில் இவ்வளவு என்று அறிவிக்கப்படாத எண்ணிக்கையில் சோவியத் துருப்புகள் நிலைகொள்வதற்கான சட்ட பூர்வமான உடன்படிக்கையொன்றில் செக் பிரதமர் திரு செர்னிக்கும், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினும் கைச்சாத்திட்டதாக பிராக்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

செக் ஜனாதிபதி திரு. ஸ்வொபோடா முன்னிலையிலேயே இரு பிரதமர்களும் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதாகவும் அவை கூறியுள்ளன.

சோவியத் துருப்புகளின் சில பிரிவுகள் சில நிபந்தனைகளுடன் செக் நாட்டில் தற்காலிகமாக நிலை கொள்வதற்கு இந்த உடன்படிக்கை வழிசெய்வதாகப் பிராக் டெலிவிஷன் செய்தி ஒன்று தெரிவித்தது. ஆனால் அது நிபந்தனைகள் என்னவென்பது பற்றிக் கூறவில்லை.

உடன்படிக்கையின் வாசகம் வெளியிடப்படவில்லை.

இந்த உடன்படிக்கைக்குப் பின் கருத்து வெளியிடுகையில் செக் நாட்டிலிருந்து ரஷ்யா மற்றும் வார்சோ ஒப்பந்த நாட்டுத் துருப்புகள் பெரும்பாலும் இன்னும் சில மாதங்களில் வெளியேறிவிடுமென்று ரஷ்யப் பிரதமர் திரு கொஸிஜின் அறிவித்தார்.

செக் நாட்டில் மாமூல் வாழ்க்கையை நிலைநாட்ட மேலும் முயற்சிகள் எடுக்கப்படுமென்றும் அவற்றைத் தடைசெய்ய கம்யூனிஸ எதிர்ப்புச் சக்திகள் அனுமதிக்கப்பட மாட்டா என்றும் அவர் மேலும் கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் வளர்ந்துவரும் மேற்குஜேர்மனி வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் இராணுவ முஸ்தீபுகளை எதிர்த்தே சகல கம்யூனிஸ நாடுகளின் எல்லைகள் பலமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

செக் பிரதமர் திரு செர்னிக் ரஷ்யாவுடன் செய்த உடன்படிக்கையின் கீழ் ஜனநாயக அடிப்படையில் அமைதியாகச் செக் நாடு முன்னேற வழி பிறக்குமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## கம்யூனிஸநாடுதாக்கப்பட்டால் ருமேனியா உடன் உதவும்

### அந்நாட்டு ஜனாதிபதி உறுதி

புக்காரெஸ்ட், ஒக் 17

கம்யூனிஸ் நாடெதிலும் ஏகாதிபத்திய நாடெதுவும் ஆக்கிரமிப்புச் செய்யும் பட்சத்தில் வார்ஸோ ஒப்பந்த நாடுகளுடன் சேர்ந்து தானுமோர் அங்கத்துவ நாடென்றரீதியில் ருமேனியாவும் தனது பங்கினை ஆற்றுமென்றும் உடனடியாக ஆக்கிரமிப்புக்குள்ளாகும் சகல கம்யூனிச நாட்டிற்கும் உதவிக்கு செல்லுமென்றும் ருமேனிய ஜனாதிபதி திரு சிராசெஸ்கு அறிவித்துள்ளார்.

கம்யூனிஸ் நாடுகளுக்கிடையே அபிப்பிராய பேதங்கள் இருந்த போதிலும் அவை தீர்க்க முடியாதவையல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸ் உலகு தன்னைப் பலப்படுத்திக் கொள்ள ஒற்றுமை அவசியமென்பதைத் திரு சிராசெஸ்கு வலியுறுத்தினார்.

## இந்தியப்பிரதமர் இந்திரா தாயகம் திரும்பினர்

### மூன்று வார வெளிநாட்டுப் பயணத்துக்குப் பின்

புதுடில்லி, ஒக். 17

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தமது 3 வார காலத்தின் அமெரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று தாயகம் திரும்பினர்.

அவரை வரவேற்கப் பாலம் விமான நிலையத்தில், அவரது மந்திரிசபைச் சகாக்கள், பார்லிமெண்ட் எம். பிக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வந்திருந்தனர்.

விமான நிலையத்தில் இந்தியப்பிரதமர். பத்திரிகையாளரிடம் பேசுகையில், உற்சாகமான பெரும் வரவேற்புக்களுக்குத்தாம் பழக்கப்பட்டிருந்த போதும், தாம் விஜயம் செய்த நாடுகளில் தனக்குக் கிடைத்த வரவேற்புப் போல் தாம் முன்னர் கண்டதில்லை என்று குறிப்பிட்டார்.

அந்நாட்டு மக்கள், இந்தியாவிடம் வைத்துள்ள இந்த நட்புறவையும், நல்லெண்ணத்தையும் மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் இந்தியா, அந்நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டுமென இந்தியப் பிரதமர் கூறினார்.

### ஜோன்ஸனுடன் 5 நிமிடம் பேச்சு

நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் தங்கியிருந்த போது, அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனுடன் தொலை பேசியில் ஐந்து நிமிட நேரம் பேசினர்.

அமெரிக்காவில் தங்கியிருக்கும் நேரத்தில், அந்நாட்டு ஜனாதிபதிக்கு மரியாதை அழைப்பொன்றைச் செய்ய வேண்டுமென்ற சம்பிரதாயத்தின் அடிப்படையிலேயே தாம் அவரைத் தொலைபேசியில் அழைத்ததாகத் திருமதி காந்தி கூறினார்.

## பிரிட்டிஷ் மந்திரிசபை

### முக்கிய மாற்றம்

லண்டன், ஒக். 17

இங்கிலாந்தில், திரு. வில்ஸனின் மந்திரிசபையில் முக்கிய மாற்றமொன்று செய்யப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சும் பொதுநல நாடுகள் விவகார அமைச்சும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலம் பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரியாகக் கடமையாற்றிவந்த திரு. மைக்கேல் ஸ்டுவார்ட் பொதுநல விவகார மந்திரியாகவும் கடமையாற்றுவார். பொதுநலவிவகார அமைச்சுக்குப் பொறுப்பாகவிருந்த தொம்ஸன் பிரபு, இலாகாவற்ற மந்திரியாக்கப்பட்டுள்ளார். ஆனால் ரொடீஷிய விவகாரம் மட்டும் அவரது விசேஷ பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி கிளை

## தமிழாசிரிய சங்கநிர்வாகிகள்

நாவலப்பிட்டி, விசா

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க நாவலப்பிட்டிக் கிளையின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. நா. முத்தையா, உப தலைவர்கள் திரு. இ. காசிப்பிள்ளை திரு. க. கனகரத்தினம், காரியதரிசி: பண்டிதர் செ. நடராசா, உப காரியதரிசி திரு: க. சத்தியானந்த சிவம், தனாதிகாரி: திரு. எஸ். சுந்தரலிங்கம், உப தனாதிகாரி; திரு. என். சின்னத்தம்பி கணக்குப் பரிசோதகர்: திரு. கே. கணபதிப்பிள்ளை 4பேர் கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மேற்கு வங்காள உயிர்ச்சேதம் இப்போது 1805 ஆகியுள்ளது

### விமான நிவாரண வேலையில் பரிதாப சம்பவம்

### குழந்தை யொன்று இறந்தது

கல்கத்தா, ஒக். 17

மேற்கு வங்காள வெள்ளம், நிலச்சரிவுகளில் இறந்தோர் தொகை 1805 ஆக உயர்ந்துள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியொன்றில், இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானமொன்று உணவுப் பொட்டலங்களை ஒரிடத்தில் போட்டபோது, பரிதாபகரமான சம்பவமொன்று நிகழ்ந்தது. இச்சம்பவத்தில், மூன்று வயதுக் குழந்தையொன்று உயிரிழந்தது. மற்றும் 8 பேருக்கு காயமேற்பட்டது. இவர்களில் இருவருக்குப்படுகாயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது பற்றி வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வமான அறிக்கையில், விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டபோது, அவற்றை நோக்கி சனக்கும்பலொன்று நெருங்கியடித்துக் கொண்டு முன்னேறியதனால் ஏற்பட்ட நெரிசலிலேயே விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிக்கிமில் 257 பேர் மாண்டனர்

சிக்கிமில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்தோர் தொகை 257 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் பல சடலங்கள் மீட்கப்படவிருக்கின்றன.

இதற்கிடையில், நிலச்சரிவுகள் ஏற்பட்ட இடங்களில் இடிபாடுகளை அகற்றுவதிலும், சடலங்களை மீட்பதிலும் இந்திய இராணுவமும் விமானப்படையும் ஆற்றியுள்ள பெருந் சேவைக்குச் சிக்கிம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

## கராச்சியில் மாணவர்குழப்பம்

### கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன

கராச்சி, ஒக். 17

கராச்சியில் ஏற்பட்ட மாணவர் குழப்பங்களை அடுத்து, அந்நகரிலுள்ள சகல அரசாங்க, தனியார் கல்வி நிலையங்களும் இம் மாதம் 31ந் திகதிவரை மூடப்பட்டுள்ளதாகக் கராச்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அங்கு, மாணவர்கள் மற்றும் பல கோரிக்கைகளுடன் படிப்புச் சம்பளக் குறைவுக் கோரிக்கையையும் வைத்து நேற்றுடன் 8வது நாளாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வந்துள்ளனர்.

நேற்றுக் கராச்சி வானொலி நிலையத்தினுள் சுமார் 500 மாணவர்கள் புகுந்து, அங்குள்ள மேசை, கதிரைகள், ஜன்னல்களை அடித்து நொறுக்கியபோது, பொலிசார் வானத்தை நோக்கிச் சுட்டு அவர்களைக் கலைத்ததாகக் கூறப்படுகிறது.

வானொலி நிலையத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காருக்கும், மோட்டார் சைக்கிளுக்கும் மாணவர்கள் தீவைத்துக் கொளுத்திவிட்டனர்.

## இரண்டு இந்தோனேஷியப்போர்வீரர் சிங்கப்பூரில் மரண தண்டனை

### மூன்று வருடங்களுக்கு முன் நடந்த குண்டுவெடிப்பின் எதிரொலி

சிங்கப்பூர், ஒக், 17

சிங்கப்பூரில், இரண்டு இந்தோனேஷியப் போர் வீரர்கள் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளார்கள். இவ்விரு போர்வீரரும், இந்தோனேஷியா மலேஷிய எதிர்ப்பு இயக்கத்தை மேற்கொண்டபோது மூன்று வருடங்களுக்கு முன் சிங்கப்பூரில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வடவியட்னும் குண்டுவீச்சை நிறுத்துவது பற்றி அமெரிக்கா ஆலோசனை

### ஆஸ்திரேலியப்பிரதமர் தகவல்

கான்பெரா, ஒக். 17

வட வியட்னும் மீதான குண்டு வீச்சை முற்று முழுதாக நிறுத்துவது சம்பந்தமாக அமெரிக்கா, தனது வியட்னும் போர்ச் சகாக்களுடன் கலந்தாலோசனை செய்து வருவதாக ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. கோர்டன் இங்கு அறிவித்துள்ளார்.

இது பற்றி திட்டவட்டமான தகவல்கள் மேலும் கிடைக்கவில்லை. ... உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையில், தென் வியட்னுமில் உள்ள அமெரிக்கத்தூதுவர் திரு. பங்கர், நேற்று தென்வியட்னும் ஜனாதிபதி திரு. வான் தியூவைச் சந்தித்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி, கடந்த செவ்வாய் இரவு அனுப்பியிருந்த விசேஷ செய்தி யொன்றைத் திரு. பங்கர், தென் வியட்னும் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

திரு. பங்கரும், திரு. வான்தியூவும் வட வியட்னும் குண்டு வீச்சு நிறுத்தப்படுவது பற்றிப் பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ஜோன்ஸன் மறுப்பு

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன், வியட்னும் போரில் எவ்வித புதுக் கட்டமும் அடையப்படவில்லையெனவும், வட வியட்னும் குண்டு வீச்சுக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும் ஜனநாயகக் கட்சி சார்பில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று அபேட்சகர்களுக்கும் அறிவித்துள்ளதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சட்டப்புத்தகங்களால் சமாதானம் ஏற்படாது"

அளவெட்டி, விசா

"நாட்டின் உள்ள நீதிமன்றங்கள் சட்டமுறைமாகவும், சாட்சியங்கள் மூலமாகவும் தீர்ப்பளிக்கும் வழக்குகளிலும் பார்க்க நாட்டின் கிராமங்களில் இயங்கிவரும் சமாதான சபைகள் மூலம் தீர்க்கப்படும் சிறு வழக்குகளினால் கிராம மக்களிடையே சமாதான சகவாழ்வும், ஒற்றுமையும் ஏற்பட ஏதுவாகின்றது. உண்மையில் ஒருவன் குற்றஞ்செய்திருந்தாலும் நீதிமன்றங்கள் சட்டத்தையும் சாட்சிகளையும் முன்வைத்து தீர்க்கப்படும் வழக்குகளினால் மக்களிடையே குழப்பமான நிலை உருவாகி அதையடுத்து பல சச்சரவுகள் தோன்றி மக்கள் நாட்களை வீணாக்குவதோடு அவர்களின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது".

இவ்வாறு அளவெட்டி ஞானோதய வாசிகசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமாதான சபை 8-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பண்டிதர் க. நாகலிங்கம் பேசுகையில் கூறினார்.

செனட்டர் சு. நடராசா பேசுகையில் "உலக சமாதானத்துக்காக ஐக்கியநாடுகள் சபை நிறுவப்படும் உலகில் சமாதானத்தைக் காண முடியாது வல்லரசுகள் திண்டாடும் இந்நேரத்தில் கிராம மக்களிடையே சமாதானத்தைப் பேண அளவெட்டி சமாதான சபையின் தொண்டு பாராட்டுதற்குரியது. இச் சபையின் அங்கத்தவர்களின் சேவையைப் பாராட்டி விரைவில் நற்பதக்கம் வழங்கவேண்டும்" என்று கூறினார்.

வழக்கறிஞர் சு. இளையதம்பி பேசுகையில் "சமாதானசபைகள் அரசியல் கலப்பற்றதாக திகழவேண்டும். இச் சபைகளில் சாட்சிகள் சொல்லாமல் நிற்பதால் நாம் நீதியை நிலைநாட்டமுடியாமலிருக்கிறது எனவே நீதியை நிலைநாட்ட உண்மையான சாட்சிகளின் உதவி பெறவும் வேண்டும்" என்று கூறினார்.

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் "பாடசாலைகளிலே இளம் சிறார்கள் இதயங்களில் சமாதானத்தை புகட்டவேண்டும். அப்படிப்பட்ட பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் பிற்காலத்திலும் நீதிமன்றங்களுக்கு செல்லமாட்டார்கள். சட்டப்புத்தகங்களை புரட்டி தீர்ப்பு வழங்குவதில் பயனில்லை. கிராம மக்களின் அறிவுத்திறனைப் பயன்படுத்தி உண்மையான சமாதானத்தை நிலைநாட்டவே இச் சமாதானசபை உதவுகிறது" என்று கூறினார்.

செ. மயில்வாகனம், வலிவடக்கு காரியாதிகாரி திரு. பத்திர உப்பட மற்றும் பலர் பேசினர்.

இச் சமாதானசபை தலைவர் வை. இராசதுங்கத்தின் வரவேற்புரையை அடுத்து இச் சபையின் செயலாளர் அறிக்கையை சமர்ப்பித்தார்.

இச்சபைக்கு நல்ல சேவை செய்த அமரர் மு. சின்னத்தம்பிக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு அவரின் சேவையைப்பற்றி ஆசிரியர் சின்னத்துரை உரையாற்றினார்.

## தலைவர்பதவி இழந்தார்

உடுவில், விசா

சுந்தரோடை ஐக்கியபண்டகசாலையின் தலைவர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேற்குக் கூட்டுறவு ஆசு உதவி ஆணையாளர் திரு. பி. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி ஐக்கிய பண்டகசாலையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் அப்பண்டகசாலையின் தலைவரான திரு. மா. நடராசாவின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஐக்கியபண்டகசாலையின் புதிய தலைவராக திரு. எஸ். விஜயானந்தன் ஏகமனதாக அக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார். இம்மாதம் 20-ம் திகதி நடைபெற இருந்த மேற்படி பண்டகசாலையின் வருடாந்தக் கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சங்கானை இளைஞர் மன்றத்தின் சமயப்பணி

சங்கானை, வியாழன்

சங்கானையில் சைவ இளைஞர் மன்றம் திரு. இ. அப்பாத்துரையால் ஆங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. மன்றத்தார் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் விழா எடுக்கும் நோக்குடன் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட விழாவில் ஆலாலசுந்தரின் சரிதை இடம்பெற்றது. இதனை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் தொடக்கிவைத்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகள் தோறும் மற்றும் நாயன்மார்கள் சரிதையை அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவர்.

அறுபத்து மூவரது சரிதை முடிவுற்றதும் மேற்படி மன்ற மாணவ மாணவிகளுக்கு பரீட்சை நடாத்தப்பட்டு தங்கப் பதக்கம் நற்சாட்சிப் பத்திரம் ஆகியவை வழங்கப்படும்.

நடப்புவருட உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்: போஷகர்: திரு. இ. அப்பாத்துரை, தலைவர் செல்வன் செந்தமிழ் செல்வன், காரியதரிசி: செல்வன் க. செல்வராசா, தனாதிகாரி: செல்வன் பொ. அருந்தவச்செல்வன், நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வட்டுக்கோட்டை மக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை அராலி விறகுசாலையில் விறகு இல்லாததால் மக்கள் கஷ்டமடைகின்றனர். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் விறகுசாலையைப் பொறுப்பேற்கவிருப்பதால் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து 15-ந் திகதிவரை வியாபாரம் நடைபெறுமலிருந்தது 15ந் திகதிக்குப் பின் நடைபெறவிருந்த விறகு வியாபாரம் விறகுவந்து சேராததால் நடைபெறவில்லையெனத் தெரியவருகிறது.

[தே.நி]

### சாவகச்சேரி நகரசபைத் தலைவர் மீது

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியுற்றது

சாவகச்சேரி, வியா

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தது.

9-ம் வட்டார அங்கத்தவர் திரு. கந்தையா மயில்வாகனத்தினால் நேற்று கொண்டுவரப்பட்ட இப்பிரேரணையை 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. பிள்ளையினார் நமசிப்பிள்ளை அனுவதித்தார்.

முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ஆ. சிவசம்பு 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. நமசிப்பிள்ளை, 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. சிவப்பிரகாசம், 8-ம் வட்டார அங்கத்தவர் திரு. பாலசுப்பிரமணியம், 10-ம் வட்டார அங்கத்தவர் திரு. என். கே. தருமலிங்கம், 11-ம் வட்டார அங்கத்தவர் திரு. கி. கனகசபை ஆகியோர் இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

6-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. சுப்பிரமணியம் கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை.

7-ம் வட்டார அங்கத்தவர் திரு. பாலசிங்கம், 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஜெயரத்தினம் ஆகியோர் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. முருகேசன் முன்னிலையில் வாக்கெடுப்பு இன்று 11 மணியளவில் நடைபெற்றது.

இப்பிரேரணையைக் கொண்டுவந்த திரு. க. மயில்வாகனம் நகரசபைத் தலைவர் தன் இச்சையாக நடந்து கொள்வதாகவும் மின்சாரப் பகுதியில் ஊழல் மலிந்துள்ளதாகவும் எடுத்துக் கூறினார்.

## நடிகர் கௌரவிக்கப்பட்டார்

நல்லூர், விசா

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபையினரால் நாடக நடிகர் திரு. சு. கே. குமாரையா கௌரவிக்கப்பட்டார்.

இதனையொட்டிய வைபவம் அரியாலை ஸ்ரீ கலைமகள் ... நடைபெற்றது.

### வடபகுதி

## உபஉணவு உற்பத்திக்கு ஊக்கம்

உடுவில், வியாழன்

வட பகுதியில் உப உணவுப் பயிர்ச் செய்கையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு யாழ் மாவட்ட விவசாய இலாகா தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

மல்லி, பெருஞ்சீரகம், நற்சீரகம், கடலை போன்ற உப உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்தில் விளைவிப்பதற்கு பரீட்சார்த்தமாக யாழ்ப்பாண மாவட்ட விவசாய ஆலோசகர்கள் விவசாய மக்களுக்கு விதைகளை வழங்கியுள்ளனர்.

## வட்டுக்கோட்டை கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை கிராம சபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 23-ம் திகதி ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

12 வட்டாரங்களைக் கொண்ட இக்கிராம சபையின் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் அன்று பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரையில் கிராமசபை அலுவலகத்தில் யாழ்ப்பாண உதவித் தேர்தல் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

[தே.நி]

## இரண்டு......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்குண்டு வெடிப்பில், மூன்று பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 80 பேர் காயமுற்றனர்.

இரு இந்தோனேஷியப் போர் வீரர்களுக்கும் மன்னிப்பு அளிக்குமாறு இந்தோனேஷிய ஜனாதிபதி ஜெனரல் சுஹார்த்தோவும், மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானும் கடைசி நேரத்தில் சிங்கப்பூர் அரசாங்கத்திடம் மனுச்செய்திருந்தபோதும், சிங்கப்பூர் அரசாங்கம் இணங்க மறுத்துவிட்டது.

சடலங்கள்

ஜக்கார்த்தாவில்

ஜக்கார்த்தாச் செய்தி யொன்று, இரு போர்வீரர்களின் சடலங்களும் விமான மூலம் ஜக்கார்த்தா வந்து இன்று சேர்ந்ததாகவும், அவை முழு இராணுவ மரியாதைகளுடன் விமான நிலையத்தில் வைத்து வரவேற்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றன.




அன்றாட பாவனைக்குகந்த
அலுமினிய பாத்திரங்கள்:
பேசின்கள் சோஸ்பென்ஸ்
கேக் ரேஸ் கரி டிஸ்
மற்றும்
எல்லாவகையான பாத்திரங்களும்
ஏராளமாக எமது கையிருப்பில் உண்டு.
உங்கள் தேவைகளை பூர்த்திசெய்ய
இன்றே
எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.
டயரும்ஸ்
54, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.
போன்: 316

## பாரதியின் லட்சியம் பற்றி வித்துவான் வேலனுர்

பருத்தித்துறை, விசா.

"பாரதி தமிழையும், தமிழ்நாட்டையும் எவ்வளவு ஆர்வத்துடன் விரும்பினாரோ அவ்வாறே பாரத நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும் இலட்சியமாகக்கொண்டு பாடினார். பாரதநாட்டின் ஒவ்வொரு அங்குல நிலமும் அந்நாட்டு மக்களின் பொதுவுடைமை என்பது மட்டுமன்றி, அம் மக்கள் சுதந்திரத்துடனும் சகோதரத்துவத்துடனும் வாழவேண்டுமென இலட்சியக் கனவு கண்டார். அவ்விய இலட்சியத்தை இனி வரும் புலவரும் கைக்கொள்ளவேண்டும்".

இவ்வாறு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற பாரதிவிழாவில் ஹாட்லிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் க. வேலனுர் கூறினார். பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளைவிழாவுக்குத் தலைமை தாங்கினார்.

திருவாளர்கள் ஐ. நடராத்தினம், க. ஏரம்பமூர்த்தி பொ. க. முத்துக்குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

### புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு மேற்கு 2-ம் வட்டார அங்கத்தவரான திரு. ஐயம்பிள்ளை தாமோதரம்பிள்ளை சமாதான நீதவானாக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

